Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.497/2020

**Depositions of PW- 8**

| Name | திரு.கருத்தப்பாண்டி | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சுந்தர்ராஜன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026.

19.02.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**சாட்சி காணொளி காட்சி மூலம் ஆஜர் ஆனார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை ஆயிரம் விளக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 25.11.2019 அன்று சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த வழக்கு எண்.550/2019 பிரிவுகள்.379 இதச வழக்கு கோப்பை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 16.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கண்ணன் மற்றும் மகாலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **வரைபடம் அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் காளிஸ்வரி மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களை தனித்தனியோ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை தேடி வந்து இவ்வழக்கு தொடர் விசாரணையில் இருந்து வந்த நிலையில் 26.11.2019 ம் தேதி 10.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் கனரா வங்கி

அருகே சந்தேகத்தின் பேரில் நின்றுகொண்டிருந்த மணிமாலா என்பவரை பிடித்து விசாரணை செய்ததில் அவர் முன்னுக்கு பின் முரணாக சொன்னதால் காரணம் கூறி கைது செய்து பின்னர் 10.20 மணிக்கு சாட்சிகள் தமிழரசன் மற்றும் ஆஞ்சே ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மணிமாலாவிடம் குற்ற எண்.549/2019 வழக்கின் சொத்தை கைப்பற்றியும் வாக்குமூலத்தின் அடிப்படையில் 13.45 மணிக்கு சிவகாசி அழகேந்திரன் பைனான்ஸ் அடகு கடை முன்பு சிவகாசி அனுப்பங்குளம் சத்யா நகர் மகாலட்சுமி என்பவரிடம் எதிரி மணிமாலா அடையாளம் காட்டிய வழக்கு சொத்தை மகாலட்சுமி என்பவரிடமிருந்து 4 கிராம் தங்க மோதிரம் ஒன்று, 5 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று, சுமார் 2 கிராம் எடையுள்ள தங்க மாட்டல் ஒரு ஜோடி ஆகியவற்றை அத்தாட்சியின் பேரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.11 ஆகவும், அத்தாட்சி அசாஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அதே சாட்சிகள் முன்னிலையில் 14.30 மணிக்கு சிவகாசி அண்ணாமலை பைனான்ஸ் அடகு கடையில் வைத்து எதிரி மணிமாலா அடையாளம் காட்டியதை தேனப்பன் என்பவரிடமிருந்து 2.300 கிராம் எடையுள்ள தங்க கம்மல் ஒரு ஜோடி அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினேன். **அத்தாட்சி அசாஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **படிவம் 91 அசாஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சி காளிஸ்வரி என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தேனப்பன், மகாலட்சுமி ஆகியோர்களை விசாரித்துவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 21.01.2020 அன்று எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு.379 இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி போன்ற ஆவணங்கள் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

இவ்வழக்கினை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.